**கவனிக்க.-** *2011.02.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1694 - 2011 පෙබරවාරි මස 18 වැනි සිකුරාදා - 2011.02.18

*1694 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 14 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சிறியாணி விஜேவிக்கிரம பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) ஜயந்திபுரவில் வாழ்பவர்களின் பல்பக்க ஆக்கவமைப்பை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு உறுப்பினர்களதும் அவர்களில் சார்ந்திருப்பவர்களினதும் பரஸ்பர நலனோம்பு வசதிகளைத் தூண்டுதலும் வளர்த்தலும் ஊக்குவித்தலும் ;

(2) உறுப்பினர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் உரிமை, சுதந்திரம், சிறப்புரிமை ஆகியவற்றைப் பாதுகாத்தலும் பேணுதலும் ;

(3) பத்தரமுல்லை கடுவெல பிராந்திய மற்றும் உறுப்பினர்களின் பாடசாலையிலிருந்து விலகிய தொழிலற்ற படித்த இளைஞர்களினின் நலனோம்புகையின் பொருட்டு வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தலும் அதற்காக அவர்களை ஊக்குவித்தலும்,

பிறவும்.

சிறியாணி விஜேவிக்கிரம,
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்ல மாவட்டம்.

2-508

## த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளையும் தர்ம ஸ்தாபனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

விக்டர் அந்தனீ பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளையும் தர்ம ஸ்தாபனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த த. மு. தசநாயக்க சமூகசேவைகளும் அறக்கட்டளையும் தர்ம ஸ்தாபனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) இலங்கை மக்களின் வறுமை நிலையை ஒழித்துக்கட்ட அவசியமான அபிவிருத்தியினூடாக மக்களை பேணி வளர்த்தல் ;

(2) மனித வர்க்கம் எதிர்நோக்குகின்ற உளரீதியானதும் மனவெழுச்சி ரீதியானதுமான துன்பங்களுக்குத் தீர்வாக ஆறுதல் அளிக்கவல்ல கற்பித்தல்களை மேம்படுத்துவதன் மூலமாக அவர்கள் மத்தியில் நிலவுகின்ற விரக்தி நிலையைக் குறைத்து ஆறுதல்மிக்க வாழ்க்கை முறையின்பால் ஆற்றுப்படுத்தல் ;

(3) இன, மத பேதமற்ற நன்னெறிமிக்க சமூகத்திற்கு வழிசமைக்கின்ற சமூக ஆளுமையை இனங்கண்டு குடும்பத்தையும் சமூகத்தையும் தன்னிறைவுகொண்ட அலகாக மாற்றுதலும்,

பிறவும்.

விக்டர் அந்தனீ,
பாராளுமன்ற உறுப்பினர்,
புத்தளம் மாவட்டம்.

2-345

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.